TNRM100033722024



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் மார்ச் மாதம் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.117/2024**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சிக்கல் காவல் நிலைய குற்ற எண்.83/2024. |
| **1 வது எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | கோபி |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | சுந்தரபாண்டி |
| 4. | வயது | 40/2024 |
| 5. | தொழில் | - |
| 6. | முகவரி | அடஞ்சேரி, ஏர்வாடி தர்ஹா, கடலாடி தாலுகா, இராமநாதபுரம். |
| **2 வது எதிரியின் விபரம்** | | |
| 7. | பெயர் | கருப்பையா |
| 8. | தகப்பனார்/கணவர் பெயர் | ராமசாமி |
| 9. | வயது | 63/2024 |
| 10. | தொழில் | - |
| 11. | முகவரி | 2/127, காமராஜ் நகர், சிறைக்குளம், கடலாடி தாலுகா, இராமநாதபுரம். |
| 12. | சம்பவ நாள் | 29.06.2024 ம் தேதி 10.00 மணி |
| 13. | புகார் தேதி | 29.06.2024 ம் தேதி 12.00 மணி |
| 14. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | (நிலையப்பிணை) 29.06.2024 |
| 15. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | (நிலையப்பிணை) 29.06.2024 |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:12:29 +0530

<table>
<tr><td>16.</td><td>கமிட்டல் உத்தரவு</td><td>இல்லை</td></tr>
<tr><td>17.</td><td>விசாரணை துவங்கப்பட்ட நாள்</td><td>30.07.2024</td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவுற்ற நாள்</td><td>04.03.2026</td></tr>
<tr><td rowspan="2">19.</td><td>சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(i)ன் கீழும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும்</td></tr>
<tr><td>வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும்</td></tr>
<tr><td>20.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>–</td></tr>
<tr><td>21.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>
<table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>22.</td><td>எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>04.03.2026</td></tr>
<tr><td>23.</td><td>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>24.</td><td>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவின் படியான மனுக்கள்</td><td>M.P.No.02/2026 Petition U/s.320 Cr.P.C. filed and dismissed on 02.03.2026.</td></tr>
</table>



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:12:50 +0530

| | | |
|---|---|---|
| 25. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.A.ராஜன் |
| 26. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.M.அழகுமுத்து அரியப்பன் |
| 27. | எதிரிகளின் கூற்று | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 28. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 06.03.2026 |
| 29. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 06.03.2026 |
| 30. | தீர்ப்பின் முடிவு | முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:12:52 +0530

இவ்வழக்கு என் முன்பாக 04.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை - 1 திரு.A.ராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.அழகுமுத்து அரியப்பன் அவர்கள் ஆஜராகியும், இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. புகார்தாரர் வீட்டில் கட்டிட வேலை நடைபெறுவதால் அருகில் செல்லும் மின்சார வயரை கம்பால் இழுத்து கட்டியது சம்மந்தமாக 29.06.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் 1வது எதிரி புகார்தாரரை பார்த்து டேய் ஊரைக்கெடுக்கிற தாயோழி மகனே உன்னால தாண்டா நம்ம ஊருளா கரண்டு விட்டுவிட்டு வருது என அசிங்கமாக பேசவும், புகார்தாரர் தெரியாமல் பேசாதே வீட்டு பூச்சு வேலை முடிந்ததும் வயரை அவிழ்த்து விடுகிறேன் என்று சொன்னதற்கு அருகில் நின்ற 2வது எதிரி உன் வீட்டு வேலை முடியிர வரைக்கும் நாங்க கரண்டு இல்லாமல் இருக்கனுமாடா தேவிடியா மகனே என அசிங்கமாக பேசி புகார்தாரரின் கன்னத்தில் அறைந்தும், அருகில் நின்ற 1வது எதிரி கீழே கிடந்த கம்பை எடுத்து புகார்தாரரின் தலையில் அடிக்கவும், அருகில் நின்ற சாட்சிகள் விலக்கிவிட 1வது எதிரி போகும்போது புகார்தாரரைப் பார்த்து ஒழுங்கா வயரை அவிழ்த்துவிடு இல்லைனா கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1வது எதிரி மீது இ.த.ச.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:12:56 +0530

பிரிவுகள் 294(b), 323, 506(i)ன் கீழும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 30.07.2024ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 05.09.2024ம் தேதியன்று எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு 240(1)ன் கீழ் 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும், 2 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் படி எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 6 சாட்சிகள்

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:12:59 +0530

பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அ.சா.2, அ.சா.3 ஆகவும், பார்வை மகஜர் சாட்சி அ.சா.4 ஆகவும், புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற சம்பவ சாட்சிகள், மற்றொரு பார்வை மகஜர் சாட்சி ஆகியோர் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் 6 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப் பொருள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 2024ம் ஆண்டு அ.சா.1 வீட்டில் இருந்தபோது தனது வீட்டிற்கு வெளியே சில நபர்கள் அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும், அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தபோது கீழே விழுந்து தலையில் காயம் ஏற்பட்டதாகவும், அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்டதல்ல என்றும், இதுகுறித்து சிக்கல் காவல் நிலையத்தில் தெரிவித்த போது சிக்கல் போலீசார் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டதாகவும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 என்றும், புகார் மனுவில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:06 +0530

6. அ.சா.2, அ.சா.3 தங்களது சாட்சியத்தில், வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும், போலீசார் விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்கள்.

7. அ.சா.4 தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 தன்னுடையது என்றும், சிக்கல் காவல் நிலையத்தில் இருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 29.06.2024ம் தேதி மதியம் 12.00 மணியளவில் சிக்கல் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது நாகராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு (அ.சா.ஆ.3) பெற்று நிலையக் குற்ற எண்.83/2024 பிரிவுகள் 294(b), 323, 506(1) இ.த.ச.-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே மதியம் 13.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பூமாரி மற்றும் வீரசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 தயார் செய்ததாகவும், பட்டியல் சாட்சியில் கண்ட சாட்சிகளான நாகராஜ், பரமேஸ்வரி, அமுதா, பூமாரி, வீரசேகர் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 29.06.2024ம் தேதியன்றே வழக்கின் எதிரிகளை 17.00 மணிக்கு அவர்களது வீட்டில் வைத்து கைதுக்கான காரணம் கூறி உச்சநீதிமன்ற கட்டளையை பின்பற்றி 15.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர்கள் ஜாமீனில்



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:08 +0530

நிலைப்பிணையில் விடுவித்ததாகவும், வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 506(1) இ.த.ச ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் கீழ் 04.03.2026 ம் தேதியன்று வினவியபோது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும், 2 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

## தீர்வு

11. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 6 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அ.சா.1 ம், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் பிறழ்

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:11 +0530

சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

12. இவ்வழக்கில் அ.சா.1ம், எதிரிகளும் பெரியோர் முன்னிலையில் சமாதானமாகி விட்டதாக கு.வி.மு.ச. பிரிவு 320(2)-ன் கீழ் மனு தாக்கல் செய்து அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 முதல் அ.சா.5 தவிர இதர சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள்.

13. அ.சா.5 ஆவணங்களின் அடிப்படையில் அளித்த சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, புகார்தாரர் வீட்டில் கட்டிட வேலை நடைபெறுவதால் அருகில் செல்லும் மின்சார வயரை கம்பால் இழுத்து கட்டியது சம்மந்தமாக 29.06.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் 1வது எதிரி புகார்தாரரை பார்த்து டேய் ஊரைக்கெடுக்கிற தாயோழி மகனே உன்னால தாண்டா நம்ம ஊருளா கரண்டு விட்டுவிட்டு வருது என அசிங்கமாக பேசவும், புகார்தாரர் தெரியாமல் பேசாதே வீட்டு பூச்சு வேலை முடிந்ததும் வயரை அவிழ்த்து விடுகிறேன் என்று சொன்னதற்கு அருகில் நின்ற 2வது எதிரி உன் வீட்டு வேலை முடியிர வரைக்கும் நாங்க கரண்டு இல்லாமல் இருக்கனுமாடா தேவிடியா மகனே என அசிங்கமாக பேசி புகார்தாரரின் கன்னத்தில் அறைந்தும், அருகில் நின்ற 1வது எதிரி

கீழே கிடந்த கம்பை எடுத்து புகார்தாரரின் தலையில் அடிக்கவும், அருகில் நின்ற சாட்சிகள் விலக்கிவிட 1வது எதிரி போகும்போது புகார்தாரரைப் பார்த்து ஒழுங்கா வயரை அவிழ்த்துவிடு இல்லைனா கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

14. சம்பவம் குறித்து அ.சா.1 புகார் மனு அளித்த போதிலும் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு, கடந்த 2024ம் ஆண்டு அ.சா.1 வீட்டில் இருந்தபோது தனது வீட்டிற்கு வெளியே சில நபர்கள் அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும், அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தபோது கீழே விழுந்து தலையில் காயம் ஏற்பட்டதாகவும், அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்டதல்ல என்றும், இதுகுறித்து சிக்கல் காவல் நிலையத்தில் தெரிவித்த போது சிக்கல் போலீசார் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சியை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதால் மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் தன்மை நிலையான நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு முரண்பட்டு காணப்படுவதால் அ.சா.1 அளித்த புகார் மனு மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல்



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:18 +0530

அறிக்கை ஆகியவற்றின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. அ.சா.1 முதல் அ.சா.5 தவிர மற்ற சம்பவ சாட்சிகள், மற்றொரு பார்வை மகஜர் சாட்சி ஆகியோர் விசாரணை செய்யப்படவில்லை. புலன் விசாரணை அதிகாரி அளித்த சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எதிரிகள்தான் இவ்வழக்கின் குற்றத்தை செய்தார்கள் என்று அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு காண இயலாது. எனவே மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

18. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:22 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் தேதி வெள்ளிக்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| அ.த.சா. | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | நாகராஜ் |
| அ.சா.2 | அமுதா |
| அ.சா.3 | பரமேஷ்வரி (எ) பாப்பா |
| அ.சா.4 | பூமாரி |
| அ.சா.5 | விஜயபாஸ்கரன் |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| Ex.P.1 | 29.06.2024 | புகார் மனுவிலுள்ள கையொப்பம் |
| Ex.P.2 | 29.06.2024 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| Ex.P.3 | 29.06.2024 | புகார் மனு |

| | | |
|---|---|---|
| Ex.P.4 | 29.06.2024 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.5 | 29.06.2024 | பார்வை மகஜர் |
| Ex.P.6 | 29.06.2024 | மாதிரி வரைபடம் |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை.

எதிரிகள் தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

குறிப்பு:-

1. சாட்சிகளின் விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.